[1979 ஏப்ரல் 20

மாவட்டத்தின் பெயர்.	கிராமத்தின் பெயர்.	வீடுகளின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
கன்னியாகுமரி ..	61. குலசேகரம் ..	5
	62. தருமாபுரம் ..	35
		40

இணைப்பு II

[780-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 753-க்கான விடையைக் காண்க]

விடை

(அ) & (ஆ) : இந்தப் பேரவையின் முன் கடந்த ஆண்டு விவாதிக்கப்பட்ட 1977-ம் ஆண்டு புயல் வெள்ள நிவாரண வெள்ளை அறிக்கையின் 23-ம் பத்தியில் புயல் மற்றும் மழையைத் தாங்கக்கூடிய பாதுகாப்புக் கூடங்கள், தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் கட்டப்பட வேண்டியதின் அவசியத்தை குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனும் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அவர்களுடனும் கலந்து, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தென்னாற்காடு மாவட்டங்களில் மேடான இடங்களில் பாதுகாப்புக் கூடங்கள், ஒவ்வொரு கட்டமாகக் கட்டுவதற்கு முடிவெடுத்தது. சாதாரண காலங்களில், கிராம மக்களுக்கு முதியோர் கல்வித் திட்டத்திற்காகவும், சில இடங்களில் மாணவர்களுக்குப் படிக்கவும், சில இடங்களில் கிராம மக்கள் ஒன்று கூடி தங்கள் பிரச்சனைகளைப் பற்றி பேசவும் இவை பயன்படுத்தப் படும்.

2. முதல் கட்டமாக, தஞ்சாவூர் மாவட்டத்தில், நாகப்பட்டினம் வட்டத்தில் அக்கரைப் பேட்டையிலும், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில் மீனிச்சிலும். தலைமைப் பொறியாளர் பொதுப் பணித்துறை (கட்டிடங்கள்) அவர்களால் மொத்தம் இரு பாதுகாப்புக் கூடங்கள் கட்டப்படுவதற்கு 1978ம் ஆண்டு சனவரித் திங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, கட்டிடங்களும் கட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டு 1978-ஆம் ஆண்டு நவம்பரில் அடித்த புயல், மழை காலத்தில் பயன்

1979 ஏப்ரல் 20]

படுத்தப்பட்டுள்ளன. இவைகளுக்கான செலவுத் தொகையில் பாதியை இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளை ஏற்க இசைந்துள்ளது. இதைத் தவிர பாதுகாப்புக் கூடங்கள் கட்டப்பட்டு வரும் 17 இடங்களின் விவரங்களாவன :—

வரிசை எண்ணும், கட்டப்படும் இடமும்.	குறிப்புரை.
(1)	(2)
தென்னாற்காடு மாவட்டம் :—	
1. ஆலப்பாக்கம் ..	இவை மகாராட்டிர மாநில மக்கள் புயல் நிவாரணக்குழு இதற்காக அளித்த ரூ. 10 இலட்சம் நன்கொடையுடன் கட்டப்படுகின்றன. இவற்றில் வல்லம்படுகை, பிச்சாவரம் ஆலப்பாக்கம், ஆகியவற்றில் கட்டிட வேலைகள் முடிந்து கட்டிடங்களை உபயோகத்திற்குத் தயாராகவுள்ளன. (1–5)
2. பெரிய குப்பம் ..	
3. பிச்சாவரம் ..	
4. ஜெயங்கொண்டபட்டினம்	
5. வல்லம்படுகை ..	
செங்கல்பட்டு மாவட்டம் :—	
6. வெம்பனூர் ..	இவை மாநில அரசும், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளையும் இணைந்து, ஆளுக்குப் பாதி தொகையினை ஏற்கும் திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்றன. (6–15)
7. கடலோரகுப்பம்	
8. சாலவான் குப்பம்	
9. இஞ்சம்பாக்கம் ..	
தஞ்சாவூர் மாவட்டம் :—	
10. ஆலக்குடி ..	
11. வடபொய்யூர் ..	
12. பிரதம ராமாபுரம் ..	
13. விலுந்தமாவடி ..	
14. நாலுவேதப்பட்டி ..	
15. ஏரிப்புரக்கரை ..	

TAMIL NADU LEGISLATURE
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்ணும், கட்டப் படும் இடமும்.	குறிப்புரை.
(1)	(2)
புதுக்கோட்டை மாவட்டம் :—	
16. கிருஷ்ணராஜிபட்டினம் ..	
17. முதுக்கிடா ..	

3. மேலும், 11 பாதுகாப்புக் கூடங்கள் கட்டுவதற்கு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ள இடங்களின் விவரங்களாவன :—

செங்கற்பட்டு மாவட்டம் :—	
1 கேலம்பாக்கம் ..	இவையும் மாநில அரசும், இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளையும் இணைந்து ஆளுக்குப் பாதித் தொகையினை ஏற்கும் திட்டத்தின் கீழ் கட்டப்படும்.
2. நெமிலி ..	
3. முத்துக்காடு ..	
தஞ்சாவூர் மாவட்டம்	
4. கலமாநல்லூர் ..	
புதுக்கோட்டை மாவட்டம்	
5 காட்டு மாவடி ..	
6. மணமேல்குடி ..	
7. கோட்டைப்பட்டினம் ..	
இராமநாதபுரம் மாவட்டம் :—	
8. தொண்டி ..	
9. உச்சிபுலி	
10. தேவிப்பட்டினம் ..	
11. உப்பூர் ..	